கோடம்பாக்கம். ௐ 2-௫-1979

பகவான் ரமண மஹரிஷிகளின் பகவத்வசனாம்ருதம் 1937-12-15ம் தேதி அன்று

ஆசார்ய சங்கர பகவத்பாதர் அருளியுள்ள சிவானந்த லஹரி என்னும் துதியினின்றும் பகவான் பத்து சுலோகங்களை அன்பர்கள் வேண்டுகோட்கிசைந்து தேர்ந்தெடுத்து அவற்றின் வரிசைக்கிரமத்தையும் பின்வருமாறு அமைத்துள்ளார்

(1) அங்கோலம் (2) பக்திர் மஹேச பத (3) ஜனனம்ருதியுக்தானாம் (4) கடோவா (5) வக்ஷஸ்தாடன சங்கயா (6) நரத்வம் தேவத்வம் (7) குஹாயாம் கேஹே வா (8) கபீரே காஸாரே (9) வடுர்வா கேஹீ வா (10) ஆத்யா (அ)வித்யா

அவற்றின் பொருள் பின்வருமாறு;

சுலோகம் 61 - 1 [அங்கோலம்] அழிஞ்சின் மரத்தை அதன் விதைத்திரளெனவும், காந்தத்தை ஊசியெனவும், ஸதி தன் பதியையெனவும், தருவைக் கொடியெனவும், கடலை நதியெனவும் பசுபதியின் இணையடியை யணுகிச் சித்த விருத்தி அம்மயமாய் கலந்து நிற்றலே பக்தியெனப்படும்

சு. 76 பக்திர் மஹேச (2) மஹேசன் திருவடியாம் வானத்தையுற்ற பக்தியாம் மேகம் ஆனந்த மழை பொழிய, எவனது உள்ளமாம் நீர்நிலை அதனால் நிறைவுறுகின்றதோ அவனது வாழ்க்கையாம் பயிரே நிறைபயன் உற்றதாம்.

சு. 83. ஜனனம்ருதி (3) பிறப்பிறப்புறும் சிறு தேவதைகளை வழிபடலால் அற்பமும் சுகமில்லையென்பதில் ஐயம் சிறிதுமில்லை. பிறப்பிறப்பற்ற அம்பிகை-பாகனாம் மஹேசனை வழிபடுவோரே பரமானந்தப்பேற்றைப் பெறுந்தன்மையராவர்

சு. 6 கடோவா (4) மனவியக்கங்களாம் தர்க்கங்கள் பயங்கரமாம் சாவை ஒருபோதும் நீக்க வல்லனவாகா, அவற்றாலுறும் வீண் தொல்லை வலியைத் தவிர்த்து, நல்லறிவுடன், சம்புவின் பாதாரவிந்தத்தைப் பணிந்து பரமானந்தத்தைப் பெறு

சு. 65 வக்ஷஸ்தாடன (5) நெஞ்சில் உதைகிடைக்கும் அச்சத்தால் யமன் அவனைவிட்டகல்வான்; தேவர்களும் அவனைப் பணிகின்றனர்; மோக்ஷலக்ஷ்மி அவனையடியினை பிரியாதிருப்பள்; எவனதுள்ளம்

நின் பதமலரன்பில் ஈடுபட்டதோ, எதுவே அவனுக்கெய்தற்கரிதாம்?

சு.(10) நரத்வம் (6) மனிதனாகவோ, தேவனாகவோ மலையாகவோ காடாகவோ, எவ்விலங்காகவோ கொசுவாகவோ, பசுவாகவோ, புழுவாகவோ பறவையாகவோ எவ்வாறு பிறப்பினும் அதனாலென்ன? இதயம் மட்டும் என்றும் நின்பத கமலஸ்மரணத்தால் பரமானந்தலஹரியிலே திளைக்குமேல், எப்பிறவி வாய்ப்பினும் அதனாலென்ன (இடையூறு)

சு.12 - குஹாயாம் (7) குகையிலோ வீட்டிலோ வெட்டவெளியிலோ காட்டிலோ மலையுச்சியிலோ நீரிலோ நெருப்பிலோ எங்கேவசிப்பினும் அதனாலாவதென்? சம்போ? எவனதுள்ளம் எப்போதும் நின்திருவடியால் நிலைபெற்றிருக்குமோ, அவனே உத்தமயோகி அதுவே யோகமெனப்படும். அத்தகையோனே பரமானந்தஸ்வரூபி.

சு.(9) கபீரே (8) ஆழமிகு மடுவிலும், மனித சஞ்சாரமற்ற பயங்கரக் காட்டிலும், பரந்த மலைச் சரிவுகளிலும்; மலர்களுக்காக மதியிலி அலைகின்றன் உமாகாந்த! உள்ளத் தாமரையொன்றை உனக்கர்ப்பித்து சுகமேயிருக்க மாந்தர் அறிந்திலர் அந்தோ

சு.11. வடுர்வா (9) பிரஹ்மசாரியாகவோ, கிரஹஸ்தனாகவோ, யதியாகவோ, முனியாகவோ, மனிதனாகவோ, வேறெவ்வாறோ ஒருவன் இருக்கட்டும் அதனாலாவதென்? நலன்களின் அடிப்படையாம் பசுபதியே! எவனது உள்ளத் தாமரை நினக்கே உடைமையானதோ அவனுக்கே நீ உரியோனாகி அவனது பாரமனைத்தையும் வகித்தருள்கின்றாய்.

சு.91 ஆத்யா (அ) வித்யா (10) சந்திரசேகரா! இதயத்தில் படர்ந்த அனாதி அவித்யை நினதருளால் அறவே யகன்றது; ஆனந்தமயமாம் இதயவித்தை அகத்தே நிலைத்தது. முக்திக்கிருப்பிடமாம் நின் பரம மங்கள பதகமலத்தை உள்ளத்தென்றும் வழிபடுகின்றேன்

இந்த சிவானந்தலஹரி ஸ்தோத்திரத்தை பகவான் ரமணரிஷிகளித்தபடி 10 ஸ்லோகத்தையும் வரிசையாக்கி தினமும் படிக்கவும் சௌடமாக்கும் செல்வித் கொடுக்கிறதை நோட்டில் எழுதிக்கொள்ளும்